Roll No: 016520

Booklet Sl.No.: 4220

Booklet Series **D**

**P-01**

# TEACHERS' RECRUITMENT BOARD
## POST GRADUATE ASSISTANTS - 2001
## WRITTEN RECRUITMENT EXAMINATION
## TAMIL

**Time Allowed : 3 Hours ]** **[ Maximum Marks : 100**

1. ஒரு பிடிச் சோறு - இதிலுள்ள பிடி என்பது

   A) பெண்யானை B) உணவுப் பெயர்

   C) முதனிலைத் தொழிற் பெயர் D) சினைப் பெயர்.

2. இருதிணை மூவிடங்களுக்கும் பொதுவாக வருவன

   A) பொதுப் பெயர் B) வினையாலணையும் பெயர்

   C) ஆகுபெயர் D) காரணப் பெயர்.

3. பலகை என்பதனைப் பல + கை எனப் பிரித்துப் பொருள் கொண்டால் அது

   A) பிரிமொழி B) தொடர் மொழி

   C) பொதுமொழி D) இனமொழி.

4. வினைத் தொகையை நன்னூலார் எவ்வாறு சுட்டியுள்ளார் ?

   A) காலம் கரந்த பெயரெச்சம் B) முக்காலப்பெயர்

   C) குறிப்பு வினைமுற்று D) ஊறுகாய்ச் சொல்.

5. வினைச் சொல்லின் அடையாளம்

   A) வேற்றுமை ஏற்கும் B) காலம் காட்டும்

   C) நினைத்த போது தோன்றும் D) செய்யுளில் மட்டும் வரும்.

6. தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரையாய் ஒலிக்கப்படும் எழுத்து

A) உயிர் எழுத்து
B) மெய் எழுத்து
C) குற்றியலுகரம்
D) ஒற்றளபெடை

7. கால் மாத்திரையாக ஒலிக்கப்படும் எழுத்து

A) ஆய்தக் குறுக்கம்
B) மகரக் குறுக்கம்
C) குற்றியலுகரம்
D) ஐகாரக் குறுக்கம்.

8. நெடுங்கணக்கு என்று சுட்டப்படுவது

A) வாணிகக் கணக்கு
B) பள்ளிக் கணக்கு
C) தமிழ் எழுத்துக்கள்
D) அரேபிய எண்கள்.

9. தமிழ் மொழியின் மிகப் பழைய எழுத்து

A) பிராமி எழுத்து
B) தேவநாகரி எழுத்து
C) வட்டெழுத்து
D) பைசாச எழுத்து.

10. எழுத்திலக்கணம் கூறும் தமிழ்நூல்

A) நம்பியகப் பொருள்
B) நன்னூல்
C) திருக்குறள்
D) நளவெண்பா.

11. பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவோர் கைக்கொள்ள வேண்டிய நெறிமுறையைத் தமிழில் முதலில் வகுத்தளித்தவர்

A) திருவள்ளுவர்
B) திருத்தக்க தேவர்
C) இளங்கோ
D) தொல்காப்பியர்.

12. மக்களின் பேச்சிலும் செய்யுளிலும் வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களின் பெயர்

A) இயற்சொல்
B) திரிசொல்
C) உரிச்சொல்
D) திசைச்சொல்.

13. பூ, கை, என்பன

A) உயிர்மெய் எழுத்துக்கள்
B) நெடில் எழுத்துக்கள்
C) வல்லின எழுத்துக்கள்
D) ஓரெழுத்து ஒரு மொழிகள்.

14. தமிழிலுள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை ?

A) 247
B) 216
C) 245
D) 367.

15. செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் குறில் நீண்டு ஒலிப்பதற்கு என்ன பெயர் ?

A) நீட்டல் விகாரம்
B) குறில் அளபெடை
C) இன்னிசை அளபெடை
D) நெடில் அளபெடை.

16. அடிச் சொற்கள் அனைத்தும் ஓரசைச் சொற்களே என்ற கருத்தைக் கூறிய ஐரோப்பிய மொழிநூல் அறிஞர்.

A) மாக்ஸ் முல்லர்
B) ஜி.யு.போப்
C) கால்டுவெல்
D) தாம்சன்.

17. அரேபியா வட ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளில் பேசப்படும் மொழியினம்

A) அன்னாமி இனம்
B) ஆரிய இனம்
C) நீக்ரோ இனம்
D) செமிட்டிக் இனம்.

18. தேவ பாஷை என்று சிலரால் புகழப்பட்ட இந்திய மொழி

A) தமிழ்
B) உருது
C) சமஸ்கிருதம்
D) கொங்கணி.

19. வம்ப வடுகர் என்று பழந்தமிழ் நூல்களில் சுட்டப்படும் மக்களின் பேச்சு மொழி

A) மராத்தி
B) ஒரியா
C) குடகு
D) தெலுங்கு.

www.kalvisolai.com - 4 of 15.



20. திராவிட மொழிகளைத் திருந்திய - திருந்தாத என இரண்டு வகையாகப் பகுத்தவர்

A) குண்டர்ட் B) வீரமா முனிவர்

C) ஹீராஸ் பாதிரியார் D) கால்டுவெல்.

21. தமிழ்மொழியில் சொற்றொடர்கள் பெரும்பாலும் எதில் தொடங்கும் ?

A) எழுவாய் B) பயனிலை

C) செயப்படுபொருள் D) மூவிடப்பெயர்.

22. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் என்பதற்கான எடுத்துக்காட்டு

A) செங்கால் நாரை B) கவி செந்தாழி

C) குறுகுறு நடந்து D) நீர் தண்ணிது

23. பொருட் சிறப்புக் குறைந்து சுருங்கி விட்ட சொல்

A) எழில் B) நாற்றம்

C) அழகு D) மரபு.

24. விருந்து என்னும் சொல் தொல்காப்பியர் காலத்தில் என்ன பொருளில் வழங்கப்பட்டது ?

A) புதுமை B) புன்னகை

C) உறவினர் D) நிறைவான பதார்த்தங்கள்.

25. செட்டி நாட்டில் காவணம் என்னும் சொல்லால் சுட்டப்படும் பொருள்

A) உள்ளாடை B) கோபம்

C) பகடி D) பந்தல்.

26. தமிழ் மொழியை அரவம் என்று சுட்டும் மக்கள்

A) முஸ்லிம்கள் B) வங்காளிகள்

C) தெலுங்கர்கள் D) பனியாக்கள்.

www.kalvisolai.com - 5 of 15.



27. இக்காலம் மலையாளம் பேசும் நிலப்பகுதியின் பழைய பெயர்

A) சேரநாடு
B) சோழநாடு
C) பாண்டியநாடு
D) பல்லவநாடு.

28. ஆண்பெண் அலி என்று பால்பாகுபாடு அமைந்துள்ள மொழியினம்

A) திராவிட மொழியினம்
B) தமிழ்மொழியினம்
C) ஆரிய மொழியினம்
D) சீனமொழியினம்.

29. சகரக் கிளவி மொழி முதல் வராது என்று கூறும் இலக்கண நூல்

A) நேமிநாதம்
B) நன்னூல்
C) தொல்காப்பியம்
D) வீரசோழியம்.

30. மொழிகளின் தனிச் சிறப்பியல்புகளை எடுத்துக் காட்ட வல்லதாக அமைவது

A) எழுத்து அமைப்பு
B) சொற்றொடர் அமைப்பு
C) எண்ணுப் பெயர்கள்
D) ஊர்ப்பெயர்கள்.

31. காரைக்கால் அம்மையார் வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ள கனி

A) பலாக்கனி
B) மாங்கனி
C) கதலி
D) கொய்யாக்கனி.

32. ஆளுடைய பிள்ளை என்று சிறப்பிக்கப்பட்ட சைவச் சான்றோர்

A) சம்பந்தர்
B) அப்பர்
C) சுந்தரர்
D) மணிவாசகர்.

33. திருமுறை கண்ட சோழன்

A) இராஜராஜன்
B) இராஜேந்திரன்
C) கரிகாலன்
D) குலோத்துங்கன்.

D

[ Turn over

34. குடிக்கொடுத்த சுடர்க்கொடி - யார் ?

A) ஔவையார்
B) ஆண்டாள்
C) மங்கையர்க்கரசி
D) பரவையார்.

35. தோல்வியுற்ற மன்னன் பெயரைச் சார்ந்து பாடப்படும் பிரபந்தம்

A) அந்தாதி
B) கலம்பகம்
C) தூது
D) பரணி.

36. பதிற்றுப்பத்து எந்த மன்னர்களைப் போற்றும் நூல் ?

A) சேரர்கள்
B) சோழர்கள்
C) பாண்டியர்கள்
D) வேளிர்கள்.

37. முடியுடை மன்னர் மூவர்க்கும் உரிய காப்பியம்

A) முப்பால்
B) இராமாயணம்
C) சிலப்பதிகாரம்
D) மனோன்மணியம்.

38. பௌத்த சமயச் சார்புடைய காப்பியம்

A) சீறாப்புராணம்
B) மணிமேகலை
C) தேம்பாவணி
D) திருவாசகம்.

39. "மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்" என அறிவுறுத்தும் காப்பியம்

A) இராமாயணம்
B) மகாபாரதம்
C) பரிபாடல்
D) மணிமேகலை.

40. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று முழங்கும் திருமுறை நூல்

A) தொல்காப்பியம்
B) ஆசாரக் கோவை
C) திருமந்திரம்
D) களவழி நாற்பது.

www.kalvisolai.com - 7 of 15.



41. தமிழ்ச் சங்கங்களைப் பற்றி விளக்கமாகக் கூறும் முதல் நூல்

A) தொல்காப்பியம் B) புறநானூறு

C) இறையனார் களவியல் உரை D) நவநீதப் பாட்டியல்.

42. பத்துப் பாட்டில் உள்ள ஆற்றுப்படைகளின் எண்ணிக்கை.

A) 5 B) 6

C) 7 D) 8.

43. நெடுந்தொகை என்பது

A) புறநானூறு B) அகநானூறு

C) நெடுநல்வாடை D) திருக்குறள்.

44. குறிஞ்சித்திணை பாடுவதில் சிறந்த சங்க காலப் புலவர்

A) ஔவையார் B) கபிலர்

C) பரணர் D) பாரி.

45. பாரதம் பாடிய பெருந்தேவனார்

A) கடவுள் வாழ்த்துப் பாடியவர் B) உமறுப்புலவரின் நண்பர்

C) தேவாரத்தைத் தொகுத்தவர் D) வெண்பா பாடுவதில் வல்லவர்.

46. கரந்தைத் திணை என்பது

A) கோட்டை முற்றுகை B) கோட்டைக் காவல்

C) ஆநிரை கவர்தல் D) ஆநிரை மீட்டல்.

47. புறப்பொருள் வெண்பா மாலை சுட்டும் புறத்திணைகள்

A) 7 B) 12

C) 16 D) 36.

www.kalvisolai.com - 8 of 15.



48. பேதைமை காரணமாகத் தோன்றும் மெய்ப்பாடு

A) நகை
B) அழுகை
C) இளிவரல்
D) உவகை.

49. இறைச்சி தானே ....................

A) சுவையான உணவு
B) இனிமை நல்கும்
C) பொருள் புறத்ததுவே
D) எல்லார்க்கும் வேண்டும்.

50. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள்

A) சேரர்கள்
B) சோழர்கள்
C) பாண்டியர்கள்
D) களப்பிரர்கள்.

51. குறள் வெண்பா என்பது

A) ஈரடி வெண்பா
B) மூவடி வெண்பா
C) நாலடி வெண்பா
D) சுந்தரனார் இயற்றிய நூல்.

52. "பொருள் என்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி

A) உவமை அணி
B) ஏகதேச உருவக அணி
C) தற்குறிப்பேற்ற அணி
D) தீவக அணி.

53. முல்லைத் திணையின் உரிப்பொருள்

A) ஏங்கல்
B) இருத்தல்
C) அழுதல்
D) சிரித்தல்.

54. அறத்தொடு நிற்றல் என்பது

A) உபதேசம் செய்தல்
B) காதலை வெளிப்படுத்தல்
C) தர்மம் செய்தல்
D) கணவனைப் பேணல்.

55. ஒரு வழித் தணத்தல் என்பது

A) பிரிவு B) வெளியூர் செல்லல்

C) வெளியூரிலிருந்து திரும்பல் D) தலைவனைக் காணல்.

56. எழுவாய் என்பது

A) பெயர்ச்சொல் B) காலம் காட்டும் இடைநிலை

C) உயிரளபெடை D) ஓரசைச் சொல்.

57. அகவலோசை எப்பாலிற்கு உரியது ?

A) வெண்பா B) கலிப்பா

C) ஆசிரியப்பா D) மருட்பா.

58. "நீரும் நெருப்பும்" என்பது

A) முரண் தொடை B) பண்புத்தொகை

C) ஆசிரியத்தளை D) உயர்வும்மை.

59. மிகச் சிறந்த யாப்பிலக்கண நூல்

A) நன்னூல் B) வச்சணந்திமாலை

C) பன்னிருபாட்டியல் D) காரிகை.

60. நீர் வழிப் படூஉம் புணைபோல் - இதிலுள்ள அணி

A) தன்மை அணி B) உருவக அணி

C) உவமை அணி D) நீர்மை அணி.

61. தமிழ் நாட்டில் சைனிக் பள்ளி அமைந்துள்ள இடம்

A) கோயம்பத்தூர் B) சேலம்

C) திருச்சிராப்பள்ளி D) கன்யாகுமரி.

62. 1944 ஆம் ஆண்டின் செர்ஜண்ட் அறிக்கை .................... நிறுவுவதை வலியுறுத்தியது.

A) முன்-ஆரம்ப பள்ளிகள்
B) ஆரம்ப பள்ளிகள்
C) தொழில் பள்ளிகள்
D) பொது பள்ளிகள்.

63. தஞ்சாவூர் பல்கலைக்கழகம் பிரத்தியேகமான ........................ பாடங்களை கற்பிக்கிறது

A) கம்ப்யூட்டர்
B) தமிழ் இலக்கியம்
C) ஓரியண்டல் மொழிகள்
D) அனைத்து விஷயங்கள்.

64. தாசிஸ்டோஸ்கோப் ........................ ஐ அளவிட பயன்படுகிறது

A) கவனித்தலின் நேரம்
B) கற்றலின் நேரம்
C) மறத்தலின் நேரம்
D) நினைவின் நேரம்.

65. பாவ்லோ ........................ கொள்கையை அறிவித்தார்

A) கிளாஸிகல் கண்டிஷனிங்
B) ஆப்பரண்ட் கண்டிஷனிங்
C) ஜெனரல் கண்டிஷனிங்
D) இவற்றுள் எதுவுமில்லை.

66. DTERT யின் விரிவாக்கம் ஆனது

A) டைரக்டோரேட் ஆஃப் டீச்சிங், எஜுகேஷன், ரிசர்ச் அண்ட் டிரெயினிங்
B) டைரக்டோரேட் ஆஃப் டீச்சர் எஜுகேஷன், ரிசர்ச் அண்ட் டிரெயினிங்
C) டிஸ்டன்ஸ் டீச்சிங், எஜுகேஷன், ரிசர்ச் அண்ட் டிரெயினிங்
D) டிஸ்டன்ஸ் டீச்சர் எஜுகேஷன் அண்ட் ரீ-டீச்சிங்.

67. தேவைகளின் குரு மரபு என்ற கோட்பாட்டை கூறியவர்

A) ஆபிரஹாம் மாஸ்லோ
B) ஜீன் பியாஜே
C) பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்
D) மெக்லிலாண்ட்.

68. நுண்ணறிவு ஈவை கணக்கிடுவதற்கான சூத்திரம்

A) $IQ = \frac{MA}{CA} \times 100$
B) $IQ = \frac{MA}{CA} \times 100 \pm 5$
C) $IQ = \frac{CA}{MA} \times 100 \pm 5$
D) $IQ = \frac{CA}{MA} \times 100.$

D

www.kalvisolai.com - 11 of 15.



69. பிரடெரிக் ஜே. மெக்டொனால்டு நிறுவிய பள்ளி

A) சைனிக் பள்ளிகள் B) சமூக பள்ளிகள்

C) நடமாடும் பள்ளிகள் D) பொது மக்கள் பள்ளிகள்.

70. மிதக்கும் பல்கலைக்கழகம் (எஸ்.எஸ். யுனிவர்ஸ்) சென்னை துறைமுகத்திற்கு வந்த ஆண்டு

A) 1977 B) 1978

C) 1979 D) 1980

71. புதிய கல்வி கொள்கை ( 1986 ) யை அமுலில் கொண்டு வந்தவர்

A) இந்திராகாந்தி B) இராஜீவ் காந்தி

C) மஹாத்மா காந்தி D) இவர்களில் யாருமிலர்.

72. இந்தியாவின் தலைவிதி அவளின் பள்ளி அறையில் உருவாக்கப்படுகிறது என்னும் ஆரம்ப அறிக்கை காணப்படுவது

A) கோத்தாரி கல்வி குழு B) சமபூர்ணநந்தா கமிட்டி

C) இந்திய கல்வி குழு D) மால்கம் ஆதிசேஷய்யர் கமிட்டி

73. நவோதயா பள்ளிகளை நிர்வாகம் செய்வது

A) மாநில அரசுகள் B) மத்திய அரசு

C) தனிப்பட்ட அதிகாரிகள் D) மத்திய மற்றும் மாநில அரசுகள்.

74. கல்வியின் தற்போதைய அமைப்பு

A) குழந்தையை மையமாக கொண்டது B) பாடத்தை மையமாக கொண்டது

C) ஆசிரியரை மையமாக கொண்டது D) இவை எல்லாம்.

75. 'தலையீடாமை'' ஆசிரியர் நடைமுறையில் கொண்டு வருவது

A) அதிக கட்டுப்பாடு B) குறைந்த கட்டுப்பாடு

C) கட்டுப்பாடு இல்லாமை D) முழுமையான சுதந்திரம்.

D

76. "ஆளுமை" என்னும் சொல்லில் பெர்சனா ( Persona ) என்பது

A) நடிகரின் அங்கங்களின் தோற்றம் B) நடிகர்

C) நடிகரால் அணியப்பட்ட முகமூடி D) நடிகரால் அணியப்பட்ட ஆடை.

77. ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர்

A) முன் - ஆரம்ப ஆசிரியர் B) ஆரம்ப ஆசிரியர்

C) பெற்றோர் D) சமூகம்.

78. 'மேம்பட்ட சமூக ஒழுங்கு முறைக்கான கல்வி என்னும் புத்தகத்தை எழுதியவர்

A) ரூஸ்ஸோ B) ரஸ்ஸல்

C) மாஸ்லோ D) அரவிந்தர்.

79. 'ஒரு நாட்டின் கல்வி ஏழை எளியவர் முதல் எல்லோருக்கும்" என்பதை குறிக்கோளாக கொள்ள வேண்டும்" என்பதை வலியுறுத்தியவர்

A) நேரு B) அபுல் கலாம் ஆசாத்

C) காந்தி D) மாண்டிசோரி.

80. மேல் நிலை பள்ளியில் பலவிதமான பாடத்திட்டம் நடைமுறைபபடுத்தப்பட்ட ஆண்டு

A) 1947 B) 1951

C) 1968 D) 1978.

81. நபிபெருமானார் வரலாற்றைப் பாடும் தமிழ்க் காப்பியம்

A) குத்பு நாயகம் B) மிஃராஜ் மாலை

C) சீறாப் புராணம் D) நாயகத் திருப்புகழ்.

82. செத்தும் கொடுத்த வள்ளல் என்ற சிறப்புக்குரியவர்

A) குமணன் B) சீதக்காதி

C) வள்ளலார் D) எம்.ஜி.ஆர்.

www.kalvisolai.com - 13 of 15.



83. மகாமதியர் என்று திரு.வி.க. பாராட்டிய முஸ்லிம் பாவலர்

A) செய்குத்தம்பிப் பாவலர்
B) பாவலர் அகமது ஷா
C) செய்யது அகமதுப் பாவலர்
D) பாவலர் மதாறுப் புலவர்.

84. விபுலானந்தர் என்ற இலங்கைத் தமிழர் இயற்றிய இசை நூல்.

A) யாழ்நூல்
B) கருணாமிர்த சாகரம்
C) இசையமுது
D) மனோன்மணிக்கண்ணி.

85. கண்ணம்மா என் காதலி என்று கண்ணன் பாட்டுப் பாடிய மகாகவி.

A) கண்ணதாசன்
B) சுரதா
C) பாரதிதாசன்
D) பாரதியார்.

86. தத்துவ போதகசாமி என்று பெயரை மாற்றிக்கொண்ட தமிழ் உரைநடையின் தந்தை.

A) சீகன்பால்கு ஐயர்
B) கால்டுவெல்
C) ராபர்ட் டி நொபிலி
D) இரேனியஸ்.

87. முதல் தமிழ் அகராதியான சதுரகராதியைத் தொகுத்தவர்

A) வீரமாமுனிவர்
B) ஜி.யு. போப்
C) ஹெச்.ஏ. கிருஷ்ணபிள்ளை
D) ஏ.சி. செட்டியார்.

88. திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

A) டாக்டர் கால்டுவெல்
B) ஹீராஸ் பாதிரியார்
C) ஜி.யு. போப்
D) மாக்மில்லன்.

89. தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியவர்.

A) வடுவூர் துரைசாமி ஐயங்கார்
B) கல்கி
C) வேதநாயகம் பிள்ளை
D) அப்துல் கபூர் சாகிபு.

90. கிறிஸ்தவக் கம்பன் என்று பாராட்டப்படுபவர்

A) வீரமாமுனிவர்

B) அந்தோணிக் குட்டி அண்ணாவியார்

C) சாமுவேல் பிள்ளை

D) கிருஷ்ண பிள்ளை.

91. உரையாசிரியர் என்றாலே இவரைத்தான் குறிக்கும்

A) மணக்குடவர்

B) பரிமேலழகர்

C) இளம்பூரணர்

D) சேனாவரையர்.

92. சந்தப் பாடல்களால் முருகனைத் துதித்தவர்

A) முருகமணி

B) அதிவீரராம பாண்டியன்

C) கந்தசாமிக் கவிராயர்

D) அருணகிரி நாதர்.

93. ஊமையாய் இருந்து, முருகனருளால் பேசும் திறம் பெற்று, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடிய புலவர்

A) பட்டினத்தார்

B) திருமூலர்

C) குமரகுருபரர்

D) அருணாச்சலக் கவிராயர்.

94. நளவெண்பாவை இயற்றியவர்

A) புகழேந்திப் புலவர்

B) ஒட்டக்கூத்தர்

C) கபிலர்

D) வில்லிபுத்தூரர்.

95. நிகண்டு இக்காலத்தில் பெற்றுள்ள வடிவம்

A) அகராதி

B) அறிவியல்

C) மொழியியல்

D) சிறுகதை.

96. குடியரசு இந்தியாவின் முதல் தலைவர் யார் ?

A) டாக்டர் இராஜேந்திர பிரசாத்

B) டாக்டர் இராஜகோபாலாச்சாரி

C) டாக்டர் இராதாகிருஷ்ணன்

D) வி.வி. கிரி.

www.kalvisolai.com - 15 of 15.



97. ஒளி ஆண்டு என்பது என்ன ?

A) ஒரு வகையான ஆண்டு

B) நேரத்தின் அளவீடு

C) தொலைவின் அளவீடு

D) ஒரு ஆண்டில் ஒளி பயணம் செய்யும் தொலை தூரம்.

98. "கலிங்கத்து பரணி" யை எழுதியவர்

A) கம்பர்

B) ஜெயங்கொண்டார்

C) சேக்கிழார்

D) ஔவையார்.

99. இராஜ ராஜ சோழர் கட்டியது

A) கங்கை கொண்ட சோழபுரம்

B) பிரகதீஸ்வரர் கோயில்

C) மீனாட்சி கோயில்

D) மஹாபலிபுரம் கடலோர கோயில்.

100. மாரத்தான் ஓட்டப் பந்தயம்

A) 26 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள்

B) 21 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள்

C) 32 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள்

D) 19 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள்.